**துறையூர் நகராட்சி**

2022-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29.08.2022 ஆம் நாள் திங்கள்கிழமை காலை 10.30 மணிக்கு நகராட்சி நகர் மன்ற கூட்ட அரங்கில் கீழ் கண்ட பொருள் மீது மேற்கொள்ளப்பட வேண்டிய சாதாரணக்கூட்டத்தின் நடவடிக்கைகள்

முன்னிலை: நகர்மன்றத்தலைவர்
துறையூர்.

| மன்ற கூட்டம் நடை பெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்ட பொருள் | | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|---|
| 29.08.2022 | **01** | நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களது ந.க.எண்.28369/J3-2018 நாள்.10.12.2018-ம் தேதிய செயல்முறை ஆணையில் துறையூர் நகாட்சியில் (Out sourcing) தனியார் மயத்தின் மூலமாக 81 தூய்மை பணியாளர்களை கொண்டு திடக்கழிவு மேலாண்மை பணியை மேற்கொள்ள அனுமதித்து ஆணை வழங்கப்பட்டுள்ளது. துறையூர் நகராட்சிப்பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்ட விதிகள் 2000-ன்படி வீடு வீடாக குப்பை சேகரிக்கும் பணி அனைத்து வார்டுகளிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கு நகராட்சியில் அனுமதிக்கப்பட்ட தூய்மை பணியாளர்கள் பணியிடங்கள் 89 உள்ள நிலையில் தற்பொழுது 45 தூய்மை பணியாளர்கள் மட்டுமே உள்ளனர். சென்ற மாதத்தில் பணிஓய்வு பெற்றதாலும் தூய்மை பணியாளர்கள் போதிய அளவில் இல்லாததால் குப்பை சேகரித்தல் சாக்கடை சுத்தம் செய்தல் மக்கும் குப்பையிலிருந்து உரம் தயார்செய்தல் உள்ளீட்ட சுகாதாரப்பணிகள் முழுமையாக மேற்கொள்ள இயலவில்லை. நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் தூய்மை பணியாளர்களை தனியார் மயத்தின் மூலமாக நியமித்துக்கொள்வதற்கான நிர்வாக அனுமதி வரும் வரையில் இந்நகராட்சிப்பகுதியில் தற்போது தூய்மை பணியின் அத்தியாவசிய தேவையினை கருத்தில் கொண்டு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் குப்பை அகற்றுதல், தெருக்கள் சுத்தம் செய்தல், சாக்கடை சுத்தம் செய்தல், பேருந்து நிலையம், காய்கறி மார்க்கெட் கழிவுகளை அகற்றுதல், பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்கள் மற்றும் பிரசிதிபெற்ற சிவன் மற்றும் பெருமாள் கோவில்களுக்கு தினசரி அதிகமாக பொதுமக்கள் வந்து செல்லும் இடங்கள், கிராமபுற பகுதியிலிருந்து மருத்துவமனைக்கு வந்து செல்வதாலும், 18 பள்ளிகளில் வெளியூரிலிருந்து மாணவர்கள் படிப்பிற்காக வருவதாலும், பொதுமக்கள் அதிகம் கூடுவதாலும், உருவாக கூடிய குப்பைகளை பொதுசுகாதாரம் மற்றும் பொதுமக்களின் நலன் கருதி உடனுக்குடன் அகற்றிட வேண்டிய சூழ்நிலை இருப்பதாலும் இந்நகராட்யின் நிதிநிலையை கவனமுடன் பரிசீலினை செய்யப்பட்டு நிர்வாக நலன் கருதியும் தூய்மை பணியாளர்கள் 32 நபர்களையும் நிலா சுயஉதவிக்குழு மூலமாக நியமித்துக்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.51 நாள். 20.05.2022-ல் 01.06.2022 முதல் 31.07.2022 முடிய 2 மாதங்களுக்கு திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் அவர்களின் ஊதிய | தீர்மான எண்:198 அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | விகிதத்தின்படி நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி அடிப்படையில் நிலா சுயஉதவிக்குழு என்ற குழுவிற்கு அனுமதி வழங்கப்பட்டது. இதனை தொடர்ந்து பொதுமக்கள், பொதுசுகாதாரம் பணி பேணிகாக்கும் பொருட்டும் நகராட்சியின் நிர்வாக நலன் கருதியும் மேற்படி பணிகளுக்கு 01.08.2022 முதல் 31.10.2022 வரை (மூன்று மாதங்கள்) நிலா மகளிர் சுயஉதவிக்குழுக்கள் 32 பணியாளர்களை நியமித்து மாவட்ட ஆட்சியர் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களது ந.க.எண்.J3/9779/2018 நாள்.16.08.2019 செயல்முறை ஆணையில் கண்டுள்ள II Unskilled Employee-க்கான (2019-20)ம் ஆண்டுக்கான தினக்கூலி அடிப்படையில் ஊதியம் ரூ.385/- அடிப்படையில் ரூ.12.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்காணும் பணியாளர்களுக்கு செலவினம் மேற்கொள்ளவும் மற்றும் இச்செலவினம் வருவாய் நிதியில் செய்துகொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.4244/2018/எச்1)<br>**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம் | |
| 29.08.2022 | **02** | இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணி பொதுசுகாதார பணிகளுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ந.க.எண். 28369/து3 நாள் 10.12.2018 உத்திரவின் படி 81 மனித ஆற்றல் சப்ளை செய்ய அவுட் சோர்சிங் முறையில் பணி மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது இதனை தொடர்ந்து நகர் மன்ற தீர்மான எண்.52, நாள். 20.05.2022-ல், 01.06.2022 முதல் 31.07.2022 முடிய 2 மாதங்களுக்கு மாவட்ட ஆட்சியர் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி அடிப்படையில் காயா ஆண்கள் உதவிக்குழுவிற்கு அனுமதி வழங்கப்பட்டது. நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் தனியார் மயத்தின் மூலமாக, தூய்மைப் பணியாளர்களை நியமித்துக்கொள்வதற்கான நிர்வாக அனுமதி வரும் வரையில் இந்நகராட்சி பகுதியில் தற்போது துப்புரவு பணியில் அத்தியாவசிய தேவையினை கருத்தில் கொண்டு தொடர்ந்து பொதுமக்கள், பொது சுகாதாரத்தை பேணி காக்கும் பொருட்டும் நகராட்சியின் நிர்வாக நலன் கருதியும் திடக்கழிவு மேலாண்மை பணி, சுகாதார பணிகள், நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் பணிக்கும், தரம் பிரிக்கப்பட்ட உலர்கழிவுகளை RCC மையத்தில் சேகரித்து வைத்து சிமெண்ட் நிறுவனங்களுக்கு அனுப்பி வைத்தல், E-WASTE மின்கழிவுகளை சேகரித்து வைத்து அபாயகரமான கழிவுகளை Incinators எரிகலன்களில் எரித்து அப்புறப்படுத்துதல், உருவாக்கிய உரங்களை சலித்து சேகரித்து வைத்தல், மேற்படி பணிகளுக்கு 01.08.2022 முதல் 31.10.2022 வரை (மூன்று மாதங்கள்) காயா ஆண்கள் சுய உதவிக்குழு மூலமாக 24 பணியாளர்களை நியமித்து திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களது ந.க.எண்.J3/9779/2018 நாள்.16.08.2019 செயல்முறை ஆணையில் கண்டுள்ள II Unskilled Employee-க்கான (2019-20)ம்<br>ஆண்டுக்கான தினக்கூலி அடிப்படையில் ஊதியம் நாள் ஒன்றுக்கு ஒரு நபருக்கு ரூ.385/- என்ற விகித்த்தில் தினக்கூலி அடிப்படையில் ரூ.8.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்காணும் பணியாளர்களுக்கு செலவினம் மேற்கொள்ள வருவாய் நிதியிலிருந்து செய்துக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.4244.2018.எச்1)<br>**அலுவலக குறிப்பு**: மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:199<br>அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| 29.08.2022 | **03** | .<br><br>நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை உத்தரவின்படி ந.க.எண்.4840/2018/எச்1 நாள்.21.02.2019 6 LCV வாகனங்கள் 1 காம்பாக்டர் வாகனத்திற்கு Out Sourcing முறையில் 7 ஓட்டுநர்களை இரண்டு வருடங்களுக்கு H.M.S தனியார் ஒப்பந்த நிறுவனத்தின் மூலமாக நியமித்துக்கொள்ள பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் H.M.S நிறுவனத்தின் மூலமாக 01.04.2019 முதல் 31.03.2021 வரை 7 ஓட்டுநர்கள் நியமிக்கப்பட்டு பணிபுரிந்து வந்தனர். மேலும், கொரோனா பெறும்தொற்று மற்றும் பேரிடர் காலங்களை கருத்தில் கொண்டு கூடுதலாக 01.04.2021 முதல் 31.05.2022 வரை புதுப்பித்து பணிமேற்கொள்ளப்பட்டு வந்தது. கூடுதலாக 01.06.2022 முதல் 31.07.2022 வரை இரண்டு மாதங்களுக்கு தற்போது நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் ஓட்டுநர்களை நியமித்துக்கொள்வதற்கான வெளிகொணர்வு முகமைக்கான(Out Sourcing) நிர்வாக அனுமதி வரும் வரையில் பொதுமக்கள் மற்றும் பொதுசுகாதாரம் நலன்கருதி இந்நகராட்சியின் பொதுசுகாதார வாகனங்களான 6 LCV, 1 காம்பெக்டர் வாகனங்களை இயக்குவதற்கு ஓட்டுநர்களை நியமித்துக் கொள்ள HMS நிறுவனத்திற்கு கூடுதலாக இரண்டு மாதங்களுக்கு குறைந்த பட்ச ஒப்பந்தபுள்ளி ரூ.473.25/- ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு என்ற வீகிதத்தில் 7 ஓட்டுநர்களுக்கு 01.08.2022 முதல் 31.10.2022 வரை (மூன்று மாதங்கள்) பணி அமர்த்தி கொள்ளவும் இந்த ஒட்டுநர்களுக்கு உத்தேச மதிப்பீடு ரூ.3.50 இலட்சம் செலவினம் செய்து கொள்ள அனுமதி வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம். | தீர்மான எண்:200<br>அனுமதிக்கப்பட்டது |
| 29.08.2022 | **04** | துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் திருச்சிராப்பள்ளி அவர்களின் ந.க.எண்.0830/அ8/2022, நாள்.12.04.2022-ன் கடிதத்தில் டெங்கு மற்றும் சிக்கன்குனியா கட்டுப்பாட்டு கொசு ஒழிப்பு பணி தொடர்பாக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக (Domestic breeding checker) களப்பணியாளர்களை நியமனம் செய்து கொள்ள அறிவுரை வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து இந்நகராட்சியில் டெங்கு பணியாளர்களை கொரோனா நோய் பரவல் தடுப்பு நடவடிக்கைப்பணிக்கு பயன்படுத்திக்கொள்ள, டெங்கு காய்ச்சல் முன் நடவடிக்கை பணியையும் சேர்த்து கவனித்து வரவும், அரசு மற்றும் அரசு சாரா தனியார் அலுவலகங்கள், பள்ளிகளில் குடிநீர் தொட்டிகள் சுத்தமாக வைத்துள்ளதை உறுதி செய்தல், நகராட்சி எல்லைக்குட்பட்ட மருத்துவமனைகளை சுகாதாரமாக வைத்துள்ளதை உறுதி செய்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளவும் டெங்கு காய்ச்சல் முன்தடுப்பு நடவடிக்கை மற்றும் கொரோனா தொற்று நோய் பரவாமல் இருக்க உரிய நடவடிக்கைகளுக்கு உள்ளூரில் இயங்கி வரும் செம்பருத்தி மகளிர் சுய உதவிக்குழு மூலம் மேற்காணும் பணிக்கு 30 களப்பணியாளர்களை 01.08.2022 முதல் 31.10.2022 வரை (மூன்று மாதங்களுக்கு) மாவட்ட ஆட்சியர் திருச்சிராப்பள்ளி 2019-20-ம் ஆண்டு நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி **ரூ.385/-** அடிப்படையில் **ரூ 12.00 இலட்சம்** மதிப்பீட்டில் மேற்காணும் பணியாளர்களுக்கு செலவினம் மேற்கொள்ளவும் மற்றும் இச்செலவினம் வருவாய் நிதியில் செய்துகொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது **(ந.க.எண்.1220/2022/எச்1)**<br>**அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்**. | தீர்மான எண்:201<br>அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| 29.08.2022 | **05** | . <br><br> துறையூர் நகராட்சி – 2008-ம் ஆண்டு முதல் தேர்வுநிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சி நகரமைப்பு பிரிவில் புதிய கட்டடம் கட்டும் பணிக்கு கட்டிட அனுமதி 5 ஆண்டு காலத்திற்கு வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு அனுமதி வழங்கும் நிலையில் கட்டடத்தின் அளவுகளுக்கு ஏற்ப கட்டண விகிதம் Bylaw வகுக்கப்பட்டு வசூல் செய்யப்பட்டு வருகிறது. இவ்வாறு கட்டிட அனுமதிக்கு வசூல் செய்துவரப்படும் கட்டண விகிதம் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள பிற நகராட்சிகளை ஒப்பிடும்பொழுது மிக மிக குறைவாக உள்ளது. உதாரணமாக 1 சதுர அடி பரப்பளவிற்கு ரூ- 3.00 துறையூர் நகராட்சியில் நடப்பில் வசூல் செய்து வரப்படுகிறது. ஆனால், 1.00 சதுர அடி பரப்பளவிற்கு துவாக்குடி நகராட்சியில் ரூ. 10/- மணப்பாறை நகராட்சியில் ரூ. 8.00/- முசிறி நகராட்சியில் ரூ. 12.50/- மற்றும் லால்குடி நகராட்சியில் ரூ.12.50/- என்ற விகிதத்தில் கட்டணம் வசூல் செய்யப்பட்டு வருகிறது. எனவே, இப்பொருள் குறித்து தணிக்கைத்துறை அலுவலர்களால் கட்டணத்தை உயர்த்துமாறு அறிவுறுத்தப்பட்டு வருகிறது. எனவே, இனிவரும் காலங்களில் பின்வருமாறு நகரமைப்பு பிரிவில் வசூல் செய்யப்படும் கட்டண விகிதங்களை மாற்றி அமைக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. <br> **தரைகீழ்தளம், தரைத்தளம் மற்றும் அதற்குமேல் 3000 சதுரடி வரை - ரூ. 8.00/- சதுரஅடி** <br> **3000 சதுரடி பரப்பளவிற்கு மேல் - ரூ.15.00/- சதுரஅடி** <br> **குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு 2000 சதுர அடி வரை - ரூ.15.00/- சதுரஅடி** <br> **2000 சதுரடி பரப்பளவிற்கு மேல் -ரூ.20.00/-சதுரஅடி** <br> **ந.க.எண்.2620/F1/2022** <br> **அலுவலக குறிப்பு** <br> மன்றம் அனுமதிக்கலாம் | தீர்மான எண்:202 அனுமதிக்கப்பட்டது |
| 29.08.2022 | **06** | துறையூர் நகராட்சி வார்டு எண்.15 தெற்கு மாரியம்மன் கோவில் தெருவில் உள்ள சிறுபாலம் பழுதடைந்து பொதுமக்கள் மற்றும் வாகன போக்குவரத்து செல்வதற்கு சிரமமாக உள்ளது. எனவே மேற்காணும் பகுதியில் சிறுபாலம் சீரமைக்கும் பணி மற்றும் இதர பணிகள் மேற்கொள்வதற்கு மதிப்பீடு ரூ.2.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. <br> **(ந.க.எண்.2653/2022/இ1)** <br> **அலுவலக குறிப்பு** : <br> 1. மன்றம் அனுமதிக்கலாம். <br> 2. மேற்படி செலவினம் பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:203 அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| 29.08.2022 | **07** | துறையூர் நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகர்மன்ற கூட்ட அரங்கில் புதிதாக 5 எண்ணிக்கையிலான 2.0Ton குளிர்சாதனப் பெட்டி பொருத்துதல், அலுமினிய மற்றும் கண்ணாடி கதவு அமைத்தல், LED விளக்குகள் மற்றும் மின்சாதன உதிரிபாகங்கள் வாங்கி பொருத்துதல், Wireless Mic, Amplifier, Speaker வாங்கிடவும் மற்றும் இதர பணிகள் மேற்கொள்வதற்கு மதிப்பீடு ரூ.8.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**(ந.க.எண்.2659/2022/இ1)**<br>**அலுவலக குறிப்பு** :<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினம் பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:204<br>அனுமதிக்கப்பட்டது |
| 29.08.2022 | **08** | துறையூர் நகராட்சி வார்டு எண்.18 விநாயகர் தெருவில் அமைந்துள்ள மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிக்கு சுற்றுச்சுவரை உயர்த்தி கட்டும் பணி, சுற்றுசுவர் கட்டும் பணிஇ Grill கதவு அமைத்தல், வர்ணமடித்தல் பணி மற்றும் இதர பணிகள் மேற்கொள்வதற்கு மதிப்பீடு ரூ.3.50 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**(ந.க.எண்.2658/2022/இ1)**<br>**அலுவலக குறிப்பு** :<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினம் பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:205<br>அனுமதிக்கப்பட்டது |
| 29.08.2022 | **09** | துறையூர் நகராட்சி புதிய அலுவலகத்தில் உள்ள கழிவறைகளில் கதவு மராமத்து பணி, தண்ணீர் வசதி செய்தல், மின்விளக்கு வசதி செய்தல், Tiles, Grill அமைத்தல் மற்றும் இதர பணிகள் மேற்கொள்வதற்கு மதிப்பீடு ரூ.6.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**(ந.க.எண்.2657/2022/இ1)**<br>**அலுவலக குறிப்பு** :<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினம் பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:206<br>அனுமதிக்கப்பட்டது |
| 29.08.2022 | **10** | துறையூர் நகராட்சி பழுதடைந்த உபயோகமற்ற பவுண்டுப்பட்டி இலவச கழிப்பிட கட்டிடம் மிகவும் மோசமான இடிந்து விழும் நிலையில் உள்ளதால் ஸ்திரதன்மை சான்று வாங்கிடவும், மேற்படி பழுதடைந்து உபயோகப்படுத்த முடியாத நிலையில் உள்ள கழிப்பி டத்தை இடித்து அப்புறப்படுத்தவும், மேற்படி கழிப்பிடத்தை சொத்து பதிவேட்டி லிருந்து நீக்கம் செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**(ந.க.எண்.2654/2022/இ1)** | தீர்மான எண்:207<br>அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | **அலுவலக குறிப்பு** :<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினம் பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | |
| 29.08.2022 | **11** | துறையூர் நகராட்சி வார்டு எண்.9 உயர்நிலைப்பள்ளி சாலையில் உள்ள கழிப்பறையில் ஆழ்துளை கிணற்று மின்மோட்டார் பழுதடைந்ததை சரிசெய்ய இயலாத நிலையில் உள்ளதால் புதிய மின்மோட்டார் பொருத்தும் பணி மற்றும் இதர பணிகள் மேற்கொள்வதற்கு மதிப்பீடு ரூ.1.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**(ந.க.எண்.2656/2022/இ1)**<br>**அலுவலக குறிப்பு** :<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினம் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் | தீர்மான எண்:208 அனுமதிக்கப்பட்டது |
| 29.08.2022 | **12** | துறையூர் நகராட்சி வார்டு எண்.7 முத்துநகர் பகுதியில் மழைக்காலங்களில் தண்ணீர் தேங்கி நிற்பதாலும் மற்றும் பொதுமக்களிடமிருந்து புகார் வந்த வண்ணம் உள்ளதாலும் அப்பகுதிக்கு மழைநீர் வடிகால் அமைப்பதற்கு மதிப்பீடு ரூ.1.50 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**(ந.க.எண்.2655/2022/இ1)**<br>**அலுவலக குறிப்பு** :<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினம் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் | தீர்மான எண்:209 அனுமதிக்கப்பட்டது |
| 29.08.2022 | **13** | துறையூர் நகராட்சி அலுவலக பயன்பாட்டில் இயங்கி வரும் ஈப்பு வாகனம் எண்.TN 48 Z 6096-க்கு ஆண்டு காப்பீடு 18.08.2022-வுடன் முடிவடைந்து விட்டதால் மேற்படி வாகனத்திற்கு காப்பீடு மேலும் ஓராண்டிற்கு புதுப்பிக்க வேண்டிய தொகை ரூ.12931/-ஐ UNITED INDIA INSURANCE COMPANY LIMITED நிறுவனம் மூலம் செலுத்திட கேட்பு பெறப்பட்டுள்ளது. எனவே, அலுவலக ஈப்பு வாகனம் எண். TN 48 Z 6096-க்கு ஆண்டு காப்பீடு புதுப்பித்தல் தொகை ரூ.12931/- மட்டும் UNITED INDIA INSURANCE COMPANY LIMITED நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**(ந.க.எண்.2553/2022/இ1)**<br>**அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:210 அனுமதிக்கப்பட்டது |
| 29.08.2022 | **14** | துறையூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2021-22ன் கீழ் பணி மேற்கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் / தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திருச்சிராப்பள்ளி அவர்களின் செயல்முறை செ.மு.ஆ.எண்.1097/2022/அ3-2 நாள்.25.07.2022ன் படி துறையூர் நகராட்சி சாயக்கார தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல் மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளதை தொடர்ந்து 12.08.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி | தீர்மான எண்:211 அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளியில் சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.T.இந்திரஜித், ஒப்பந்ததாரர், துறையூர்</td><td>மதிப்பீட்டை விட 0.10% குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.K.சரவணன், ஒப்பந்ததாரர், துறையூர்</td><td>மதிப்பீட்டை விட 0.07% அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் வ.எண்.1-ல் உள்ள திரு.T. இந்திரஜித், ஒப்பந்ததாரர், துறையூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.10% குறைவாக உள்ளது ஏற்பது குறித்து மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.2089/2022/இ1)<br>
அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்</td>
<td></td>
</tr>
<tr>
<td>29.08.2022</td>
<td>15</td>
<td>. துறையூர் நகராட்சிக்குட்பட்ட பேருந்து நிலையத்தில் பொதுமக்கள் அமரும் இடத்தில் (Waiting Shed) மேற்கூரை சிதிலமடைந்து பெயர்ந்து விழும் நிலையில் உள்ளதால் மேற்கூரையினை மராமத்து பணி செய்திடவும் மற்றும் வர்ணம் அடித்தல் பணி செய்திடவும், குடிநீர் பணி, மின்வயரிங் மராமத்து பணி ஆகிய பணிகள் செய்திட ஆகும் மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.(ந.க.எண்.2681/2022/இ1)<br>
அலுவலக குறிப்பு :<br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. மேற்படி செலவினம் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>
.</td>
<td>தீர்மான எண்:212<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>29.08.2022</td>
<td>16</td>
<td>துறையூர் நகராட்சிக்குட்பட்ட பேருந்து நிலையத்தில் அமைக்கப்பட்ட தார்சாலை பழுதடைந்து குண்டும் குழியுமாக உள்ளதால் போக்குவரத்துக்கு மிகுந்த சிரமம் ஏற்படுகிறது. இதனால் விபத்து ஏற்பட வாய்ப்புள்ளதால் தார்சாலையினை மராமத்து பணி (Patch Work) செய்திட ஆகும் மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.(ந.க.எண்.2680/2022/இ1)<br>
அலுவலக குறிப்பு :<br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. மேற்படி செலவினம் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மான எண்:213<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>29.08.2022</td>
<td>17</td>
<td>இந்நகராட்சிகளில் உபயோகமற்ற மற்றும் சாலைபதிவு சான்றிதழ் புத்தகங்கள் இல்லாத பழைய வாகனங்களை கழிவு செய்து பொதுஏலத்தில் வைப்பதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.2652/2018/தி2, நாள்.11.03.2021–ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அக்கடிதத்தின்படி இந்நகராட்சியில் சுமார் 20 ஆண்டுகளாக பயன்பாட்டில் இல்லாத வாகனம்</td>
<td>தீர்மான எண்:214<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | எண்.TN45U 5366 கனரக வாகனத்தை கழிவு செய்து பொதுஏலம் விடுவதற்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.640, நாள்.11.02.2021–ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மண்டல இயக்குநர் அரசு தானியங்கி பணிமனை திருச்சி அவர்களுக்கு பயன்பாடற்ற வாகனம் என சான்றிதழ் வழங்க கடிதம் அனுப்பப்பட்டதன்பேரில் இயக்குநர் மோட்டார் வாகன பராமரிப்பு துறை சென்னை அவர்களின் ந.க.எண்.எச்1/6699/2022, நாள்.27.05.2022 –ல் TN 45 U 5366 வாகனத்தை கழிவு செய்ய தொழில்நுட்ப வல்லுநர் குழு நிர்ணம் செய்த தொகையுடன் கடிதம் வரப்பெற்றது. இதன்பேரில் நகர்மன்ற தீர்மான எண்.129, நாள்.30.06.2022–ல் மன்றம் அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் உயர்ந்த கேள்வி ரூ.**49000/–** கோரிய திரு.ஆர்.வினோத், அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. ந.க.எண்.**865/2021/இ1**<br>**அலுவலக குறிப்பு**<br>மன்றம் அனுமதி வழங்கலாம். | |
| 29.08.2022 | **18** | இந்நகராட்சிகளில் உபயோகமற்ற மற்றும் சாலைபதிவு சான்றிதழ் புத்தகங்கள் இல்லாத பழைய வாகனங்களை கழிவு செய்து பொதுஏலத்தில் வைப்பதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.2652/2018/தி2, நாள்.11.03.2021–ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அக்கடிதத்தின்படி இந்நகராட்சியில் சுமார் 20 ஆண்டுகளாக பயன்பாட்டில் இல்லாத வாகனம் எண்.TN45V 7329 கனரக வாகனத்தை கழிவு செய்து பொதுஏலம் விடுவதற்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.640, நாள்.11.02.2021–ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மண்டல இயக்குநர் அரசு தானியங்கி பணிமனை திருச்சி அவர்களுக்கு பயன்பாடற்ற வாகனம் என சான்றிதழ் வழங்க கடிதம் அனுப்பப்பட்டதன்பேரில் இயக்குநர் மோட்டார் வாகன பராமரிப்பு துறை சென்னை அவர்களின் ந.க.எண்.எச்1/6699/2022, நாள்.27.05.2022 –ல் TN45V 7329 வாகனத்தை கழிவு செய்ய தொழில்நுட்ப வல்லுநர் குழு நிர்ணம் செய்த தொகையுடன் கடிதம் வரப்பெற்றது. அதன் பேரில் நகர்மன்ற தீர்மான எண்.129, நாள்.30.06.2022–ல் மன்றம் அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் உயர்ந்த கேள்வி ரூ.**41000/–** கோரிய திரு.கே.ராஜேஷ், அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. ந.க.எண்.**865/2021/இ1**<br>**அலுவலக குறிப்பு**<br>மன்றம் அனுமதி வழங்கலாம். | தீர்மான எண்:215<br>அனுமதிக்கப்பட்டது |

ஒம்/-இ.செல்வராணி
நகர்மன்றதலைவர்

/உண்மை நகல் /

மேலாளர்,
துறையூர்நகராட்சி